பாடம் 5

# இரட்டிப்பான ஆசீர்வாதம்

*ஒருபோதும் உனக்குக் கிடைத்திராத உனக்கு மிகவும் விருப்பமான பொருள் கிடைத்தால் எப்படி இருக்கும்? அதுவும் பிரியமான பொருள் இரட்டிப்பாகக் கிடைத்தால் எப்படி இருக்கும்? தேவன் எப்போதுமே நமக்கு இரட்டிப்பான சந்தோஷத்தைக் கொடுப்பதில்தான் பிரியமா யிருக்கிறார். நாம் நினைப்பதற்கும் கேட்பதற்கும் மேலாக, இயேசு நமக்கு இரட்டிப்பாய்த் தரக் காத்திருக்கிறார். அவ்வாறு பெற்றுக்கொண்ட ஒரு பெண்ணைக்குறித்துப் பார்ப்போமா?*

எலிசா தீர்க்கதரிசி சூனேம் ஊருக்கு வரும்போதெல்லாம் சூனேமியாள் அவரை உப சரித்து உணவளிப்பாள். ஊழி யத்தினிமித்தம் எலிசா அடிக் கடி அங்கு வருவார். தன் கணவனிடம் எலிசா தீர்க்கதரிசி யைப்பற்றி, சூனேமியாள் சொன்னாள். “வசதியாக அவர் தங்குவதற்கு நாம் ஏதா கிலும் செய்யவேண்டும்” என்றாள்.

எலிசா தீர்க்கதரிசி தங்குவதற்கு வசதியாக மேலே அறை ஒன்றைக் கட்டினார்கள். அதில் அவர் ஓய்வு எடுக்கும் படிக்கு ஒரு கட்டிலையும் ஒரு மேசையையும் ஒரு நாற்காலியையும் ஒரு குத்துவிளக்கையும் வைத்தனர். இந்த ஏற்பாடு எலிசா தூங்குவதற்கும் படிப்பதற்கும் வசதியாக இருந்தது. இதனால், எலிசா மகிழ்ச்சி அடைந்தார். அந்தக் குடும்பத்திற்குத் தானும் ஏதேனும் நன்மை செய்ய விரும்பினார். எனவே சூனேமி யாளிடம், “ஏதேனும் வேண் டுமா?” என்று கேட்டபோது, அவள், “எதுவும் வேண்டாம்; எனக்கு ஒரு குறைவும் இல்லை” என்று சொன்னாள்.

சூனேமியாளுக்குக் குழந்தை இல்லை என்பது எலி சாவின் வேலைக்காரனுக்கு நினைவிற்கு வந்தது. அவன் எலிசா தீர்க்கதரிசியிடம் இதைப்பற்றிக் கூறினான். தேவன் எப்போதும் தமது பிள்ளைகளுக்கு



## மனன வசனம்

**நாம் வேண்டிக்கொள்கிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் ... தேவன் நமக்குச் செய்ய வல்லவர்.**
**எபேசியர் 3:20.**

நன்மையைத் தருவது நிச்சயம்; இது எலிசாவுக்கு நன்கு தெரியும்; எனவே, அவர் சூனேமியாளிடம், "தேவன் உனக்கு ஒரு குழந்தையை நிச்சயமாகத் தருவார்;அடுத்த வருடம் உன் கையில் ஒரு குழந்தை இருக்கும்" என்று சொன்னார்.

ஒரு வருடம் கழித்து எலிசா, சூனேமியாளின் வீட்டிற்கு வந்தார். தேவனின் கிருபையினாலே, அவள் கையிலே எலிசா சொன்னபடியே ஒரு குழந்தை இருந்தது. அவர்கள் மிகவும் மகிழ்ச்சியாயிருந்தனர்.

அவளின் மகன் வளர்ந்து அழகிய வாலிபனானான். ஒரு நாள் வயலிலே தன் அப்பாவுடன் வேலை செய்துகொண்டிருந்தபோது, அவன் தனக்கு, தலை வலிக்கிறது என்றான்.



அவன் அப்பா வேலைக்காரனுடன்,அவனைவீட்டிற்கு அனுப்பினார். வீட்டில் சூனேமியாள் அவனுக்கு ஏதேதோ மருந்துகொடுத்து கவனித்தாள். அவனைத் தனது மடியிலே படுக்க வைத்திருந்தாள். அவளது முயற்சிகள் ஒன்றும் பலனளிக்கவில்லை; அவன் இறந்துபோனான்.

தேவன் தனக்குத் தந்த ஓர் அருமையான பரிசை இழந்த அவள் துடித்துப்போனாள். ஆனால், தேவன்மேல் அவளின் நம்பிக்கைக் குறையவே இல்லை. நேரே எலிசாவிடம் சென்றாள்; "நான் எதையுமே உம்மிடம் கேட்கவில்லையே!" என்று துடிதுடித்துக் கதறி அழுதாள்.

சூனேமியாளின் வீட்டிற்கு எலிசா சென்றார். தேவனிடம் ஜெபித்தார். பின்னர் அவள் மகனின்மேல் படுத்தார். அவரது வாய் அவனின் வாய் மேலும், அவரது உள்ளங்கை அவனது உள்ளங்கையுடனும் பொருந்துமாறு படுத்தார். இரண்டு முறை அப்படிச் செய்தார். அவன் உடல் அனல் கொண்டது. அவன் ஏழுமுறை

## செய்தி

**தேவன் நாம் நினைக்கிறதற்கும் கேட்பதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குச் செய்வார்.**

தும்மினான். பின் கண்விழித்தான்.

சூனேமியாளிடம் அவள் மகனைக் கொடுத்தார். இறந்த, தன் மகனை மீண்டும் பெற்றுக் கொண்டஅவள் தேவனைத் துதித்தாள். இருமுறை தேவனிடமிருந்து சூனேமியாள் பரிசைப் பெற்றிருக்கிறாள். தேவன் மிகவும் நல்லவர்; நாம் நினைப்பதற்கும், கேட்பதற்கும் மேலாக நமக்குத் தரவல்லவர் அவர்.

நாம் அனைவரும் அவரது பிள்ளைகள்; நமக்காக உயிரையே தந்த அந்த அன்பான தேவனின் அன்பை நாம் மறந்தாலும், அவர் நம்மை ஒரு போதும் மறப்பதில்லை.

அன்புக் கண்மணி! தேவன் உனக்கும் இரட்டிப்பான ஆசீர்வாதம் தருவார்.

***செய்முறை:*** **தேவனுடைய மனுஷனாகிய எலிசாவை சூனேமியாளும் அவளது கணவரும் அன்பாக உபசரித்தார்கள். அவர்களது அன்புக்குக் கைமாறாக, அவர்களுக்கு ஒரு குழந்தை பிறக்க எலிசா தேவனிடம் ஜெபித்தார். அவ்வாறு பிறந்தக் குழந்தை வாலிபனாகி இறந்தபோதும், அவன் மீண்டும் உயிர்பெற ஜெபித்தார். இப்போது அந்தப் பக்தியுள்ள பெண்ணாகிய சூனேமியாள் தன் அன்பான மகனிடம் போய்ச்சேர வழிகாட்டி உதவு.**

## புதிர் 5

